340

Registered No. M. 2445

17 JUL 1931

உ
சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம்
ஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள்
அருட் கொடையால்.
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றக்
கழகத்தினின்று வரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க | சுக்கில ஆண்டு வைகாசித்திங்கள் 1929 — மே. | இதழ் ரு

க. காலத்தின் அருமையும் நமது கடமையும் :—

உ. வீரசைவ பஞ்சாசாரிய பீடங்களும், அவற்றின் தோன்மையும் :—

ந. ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீன பீடமும் அதன் பெருமையும் :—

ச. சிவப்பிரகாச சுவாமிகளும் அவர்நூல்களும் :-

ரு. உண்மையுணர்வு :—

சு. வாழ்த்துரைச் செய்யுட்கள் :—

எ. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள் :—

அ. அபிஷேகமாலையுரை :—

SCANNED

பத்திராசிரியர் { வீ. குமாரவீரய்யர்,
'வீரசைவநிலையம்' முசிரி, திருச்சி ஜில்லா.

விவேகபானு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

தமிழ் நாட்டு வீரசைவ சித்தாந்த மகா சங்கம்.

ஆறுவதாண்டு விழா,

வீரசைவ சமய சீலர்களே !

இவ்வருடத்திலும் நமது மகா சங்கத்தை வழக்கம்போல் கோடை விடுமுறையில் நடத்துவதற்கான முயற்சியில் இச்சங்கத்தார் பின் வாங்கினரில்லை. ஆனல் சில வேலை மிகுதியால் இவ்வருடத்தில் முன் னெச்சரிக்கையான வேலைகள் செய்ய இயலாமற் போயின. இந்த மே மாதம் 30, 31-ல் இச்சங்கத்தை நடத்தலாமெனத் துணிந்து அதற்கான வேலைகளைச் செய்துவருகின்றூர்கள். தலைவர் நியமனம் முதலியன ஆயினவுடன் நிகழ்ச்சிக் குறிப்பு வெளிவரும். பெரும் பொருட் செலவில் பெரியார் தலைமையில் நடக்கும் இம்மகா சங்கத் தில் வீரசைவ சமூகத்திற்காவது சமயத்திற்காவது இலாபகரமான பயனையுண்டாக்குதல் வேண்டுமெனக் கருதுகின்றூர்கள். அதாவது சுருங்கிய செலவில் சில கல்யாணங்களையும், தீக்ஷைகளையும் சமூகத் திற்கும் சமயத்திற்கும் பயனுகச் செய்து காட்டவேண்டுமென்பது. வேண்டுவோர் மே 25-க்குள் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். சொற்பொழிவு செய்வோர் எடுத்துக்கொள்ளும் விஷயத்தையும் குறித்த தேதிக்குள் விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும். தமிழ்நாட்டு வீரசைவ மாணவர்களின் கல்வி பயிற்சிக்குரிய ஏற்பாட்டைத் தீர்மா னித்தல் வேண்டும். யாவரும் இம்முயற்சியில் ஊக்கங்காட்டித்தங் கடமையைச் செய்தல் வேண்டும். பொறுப்பாளர்களும் காரியதரிசி களும் சந்தாவை உடனே வசூலித்து இம்மாதத்திற்குள் அனுப்புதல் வேண்டும் எனவும் இசசங்கத்தார் வேண்டுகின்றூர்கள்.

த. காரியதரிசி.

சந்தா நேயர்கட்கோர் விண்ணப்பம்.

ஐயன்மீர் !

இம்மாதத்திய 5-வது இதழைப் பெற்றுக்கொண்டவுடன் ஆண்டுச் சந்தா ரூ. 2யும், ஆயுட் சந்தா ரூ. 25யும் மணியார்டர் மூல மாக அனுப்பிவைப்பீர்களென உங்கள் பெருந்தன்மையான நோக் கத்தை எதிர்பார்க்கின்றோம். பணம் அனுப்பாதவர்கட்கு 6-வது இதழ் அனுப்புவதைப்பற்றி யோசிக்கப்பெறும்.

பத்திராசிரியர்.

17 JUL 1931

உ

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலயதேசிகசுவாமிகள் அருட்கொடையால்
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற் கழகத்தினின்று
வரும் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க	சுக்கிலஆண்டு வைகாசித்திங்கள் 1929 — மே.	இதழ் ரு

காலத்தின் அருமையும் நமதுகடமையும்.

வசவேசர் வணக்கம்.

எண்ணிகழ்ந்த வண்டமெலாம் வலம்புரிந்த
தெனவுமைமா னீன்ற வேழந்
தண்ணிகழ்ந்த நறுங்கொன்றைச் சடையொருவன்
றனைச்சூழ்ந்த தகைமை போல
மண்ணிகழ்ந்த சிவசரணர் தமையெல்லாந்
தொழுந்தகைமை வாய்ப்ப வெங்கள்
உண்ணிகழ்ந்த வசவனெனும் பெயருடையோன்
றனைவணங்கி யுவகை கூர்வாம்.

பெருந்தகைமை வாய்ந்த பெரியோர்களே!

'காலத்தின் அருமையும் நமது கடமையும்' என்னும் தலைப்பின்கீழ் 3, 4, இதழ்களிலும் எழுதப்பெற்ற கட்டுரைப் பொருள்களை யாவருமறிந்திருப்பர். காலம் தன் கொலைக் குற்றத்தையோ கொடையின் பயனையோ தன்மேல் ஏற்றிக்கொள்ளாது அவற்றை முறையே பெறும் அயர்வாரும் ஆள்வினையுடையாருமாகிய மக்கள்மேற் சுமத்தி விரைவிற் சென்றுகொண்டிருக்கும் அருமைப்பொருளென்பதை யாவரும் மறவாது சிந்தித்தல் வேண்டும்.

"பருவத்தோ டொட்ட வொழுகல் திருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு."

"அருவினை யென்ப வுளவோ கருவியால்
காலம் அறிந்து செயின்."

இத்தமிழ் மறைமொழிகளின் கருத்துக்களை யாராய்வோமாயின் ஒருவர் தாம் செய்பத் தொடங்கிய தொழிலைக் காலத்தோடு பொருந்தச்செய்யின் அதுவே, யாரிடத்தும் நில்லாது செல்லுமியல்பினையுடைய செல்வத்தினைத் தம்மிடத்து என்றும் நீங்காது நிற்கும்படிப் பிணிக்குங் கயிறுமென்றும், தாம் மேற்கொண்டதோர் வினையை அதனைமுடித்தற்குரிய கருவிகளுடன் ஏற்ற காலமறிந்து செய்வாராயின் செய்தற்கரிய வினைகளென்று சொல்லப்படுவன யாவுமில்லை யென்றும் மிகத்தெளிவாக விளங்குதலின் நாம் நம் சமூக முன்னேற்றத்திற்கும் சமய வளர்ச்சிக்கும் மேற்கொள்ளவேண்டிய தொழில்களைச் செய்தற்கு ஏற்ற காலமிதுவே யாதலின் ஒவ்வொரு கடிகையையும் வீணுக்காது பொன் போல் போற்றிக் கருதியவற்றை முடிக்க முயலல்வேண்டும்.

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையு மெய்தும்."

என்பது அனுபவ மிக்க பெரியார் வாக்கு. இவ்வுலகின்கண் மக்களால் அடைதற்குரியன அறம், பொருள், இன்பம்என்னும் மூன்றுமேயாம். இவற்றுள் இடையிலுள்ள பொருளைப் பெறின் அறத்தையும் இன்பத்தையும் பெறுதல் எளிதாம். ஆதலின், நமது சமயவுண்மையாகிய பேறத்தைச் செய்தற்கும், பேரின்பத்தை நுகர்தற்கும் கருவியாகிய பெரும்பொருளை ஈட்டுதெற்குரிய வழிகளில் நமது சமூகத்தார் இனித் தாழ்க்காது முற்படுதல்வேண்டும்.

பொருட் பெருக்கமும் புதிய முறையும்:—கால நிலை நவீன முறையைத்தாங்கி விரைவில் மாறிக்கொண்டே வருகின்றது. தொழில் நிகழ்ச்சிக்குரிய பொருட் செலவோ அதினும் அதிக விரைவாகப் பெருகிக்கொண்டே வருகிறது. நூறு வருடங்களுக்குமுன் ஒரு தொழிலைச் செய்து முடித்தற்குரிய பொருட்செலவு இருபத்தைந்து வருடங்கட்கு முன்வரையில் பதின்மடங்கு பெருகிற்று. அதுவே, பத்து வருடங்கட்குமுன்வரை அதினும் பதின்மடங்காகப் பெருகிற்று. அதுவே, ஐந்து வருடங்கட்கு முன் வரை அதினும் பதின்மடங்காகப் பெருகிற்று. ஐந்து வருடங்கட்கு முன்னிருந்த அதே தொழிற்குரிய பொருட்செலவோ வருடமொன்றுக்குப் பப்த்து மடங்காகப் பெருகிக்கொண்டே வந்து விட்டது. இனி எந்த

நிலையில் போய் நிற்குமென்பதை நாமறியோம்! இதனால் பொருட் செலவின் பெருக்கம் மக்களது அறிவாற்றல்களாற் றடைப்பட்டு நில்லாது மிக விரைவாகப் பெருகிக்கொண்டே வருகிறதென்பது புலனாகவில்லையா? பொருட் செலவைப் பெருக்கிக்கொள்வதில் விருப்பமுடைய மக்கள் பொருளீட்டுதற்குரிய வழிகளையும் காலவியல்பிற்கேற்பப் புதிய முறையிற் பெருக்கிக்கொண்டே வரவேண்டுமல்லவா? எந்நாட்டினும் எச்சமூகத்தினும் அறிவிற் சிறந்த பெரியார் பொருட் செலவு தம்மாற்றடுக்க முடியாதபடி பெருகி வருவதையறிந்து பொருட்பெருக்கத்திற்குரிய தொழில் முறைகளையும் காலவியல்பிற்கேற்ப புதிய வழிகளில் பெருக்கிப் பெரும் பொருள்தேடி இன்புறுகின்றனர். ஆனால், நமது தமிழ் நாட்டிலுள்ள வீரசைவ சமூகத்தினரோ மணம் முதலிய சுபாசுபங்களில் மற்றையோரைப் போல் பொருட் செலவைப் பெருக்கிக்கொள்வதில் முற்படுகின்றாரேயன்றி காலவியல்பிற்கேற்ப மற்றவர்களைப் போல பொருட் பெருக்கத்திற்குரிய தொழில் முறைகளையும் கைப்பற்றினாரில்லை. இதனை வெளிப்படையாகக் கூறுங்கால் ஆராய்ச்சிக் கெட்டிய வரையில் திருச்சி ஜில்லா முதலிய தமிழ் நாட்டிலுள்ள வீரசைவமாகேசரனைவரும் ஒவ்வொரு சிறு கிராமங்களிலும் தனித்தனியாகத் தொன்று தொட்டு வசித்து வருகின்றனர். அவர் சில வருடங்களுக்கு முன் வரையிலும் சோதிடம், இலக்கண இலக்கிய நூற் பயிற்சி முதலிய கல்வித்துறையிலும் ஒழுக்க நெறியிலும் சிறந்து விளங்கினமையால் தாம் இருக்குங் கிராமவாசிகளாற் போற்றப்பட்டு வந்தனர். கிராமவாசிகளோ காலநிலையறிந்து தம்மக்களை நகரங்களுக்கனுப்பி ஆங்கில பாடசாலைகளிற் பயிலச் செய்தும், வெளியேறிப் பல தொழில் முறைகளைக் கைப்பற்றிப் பொருட் பெருக்கமடைந்தும் முன் வந்துள்ளார்கள். வீரசைவர்கள் மாத்திரம் 'அன்று கண்ட மேனிக் கழிவில்லை' என்றபடி இருந்த இடத்தேயிருந்து, தம்மக்களைப் புதிய முறையிற் கல்வி பயிலச் செய்யவாவது பொருள் தேடுதற்குரிய பல தொழில் முறைகளைக் கைப்பற்றவாவது இதுவரை முயன்றார்களில்லை. பெரும்பான்மையும் ஆரம்ப பாடசாலை உபாத்தியாயர்களாகவே யிருக்கின்ற சுமார் 1000 குடும்பஸ்தர்களாகிய வீரசைவர்கள் இன்னும் சிலவாண்டுகளில் தம் வாழ்க்கையை எந்த நிலையில் நடத்திக்கொள்ளக் கூடுமென நோக்குங்கால் பரிதாபமும் அச்சமும் தோன்றவில்லையா?

பெரியோர்களே! ஆதலால் நமது வீரசைவ சமூகத்தினர் இனித்தாழ்த்து நில்லாது பொருள் தேடுதற்குரிய பல தொழில் முறைகளையுங் கைக்கொண்டு நகரங்களிலாவது வேறிடங்களிலாவது சென்று முயற்சிப்பதுடன் தம் கையிலிருப்பது சிறிது பொருளாயினும் பின் விளையும் பயனை நோக்கித் தம்மக்களையும் ஆங்கிலேய பாடசாலைகளில் படிப்பிப்பதில் செலவிடத்துணிதல்வேண்டும். புராதனமாயிருந்த கிராமங்களை விட்டு எங்ஙனம் பிரிவதெனச் சிறிதும் பின் வாங்கலாகாது. ஏற்ற இடங்கட்குச்சென்று உத்தியோகம், கைத்தொழில், வர்த்தகம், வேளாண்மைமுதலிய பலதொழில்முறைகளையும் தத்தம் மனநிலைக்கேற்றவாறு கைப்பற்றவேண்டும். பொருட் பெருக்கத்தில் முற்படவேண்டும்.

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை." இங்ஙனம்

பொய்யா மொழியார் தம் அனுபவத்தால், 'ஒருவற்குப் பொருள் வருகின்ற வருவாயின் வழி சுருங்கியதாயிருப்பினும் அதனாலவற்குக் கேடில்லை; பொருள் செலவழிந்து போகின்ற வழி அதனினும் விரியாதிருக்குமானால்' எனக் காரணங்காட்டிப் பொருள் தேடுகின்ற வழியைப் பெருக்கிக்கொள்ள முயல்வதினும் முதற்கண் பொருட் செலவின் வழியைச் சுருக்கிக்கொள்ளவேண்டுமெனக் கூறியுள்ளார். ஆதலால், வீரசைவர்களாகிய நாம் இப்பொழுதே பலதொழில் முறைகளைக் கைப்பற்றியதாக வைத்துக்கொண்டாலும் பொருட் பெருக்கத்தையடைதற்கோ இன்னும் சில ஆண்டுகள் செல்லலாம். ஆனால் பொருட் செலவோ நம் முயற்சியின்றியே பெருகிக்கொண்டு வருகின்றது. அதுபற்றியே பொருட் செலவைக் கூடியவரையில் குறைக்க வேண்டிய வழியைத் தேடிக்கொள்ளவேண்டும். நமது வட நாட்டு வீரசைவர்கள் பொருள்தேடும் முயற்சியிலும் பொருட் பெருக்கத்திலும் எல்லோரினும் முற்பட்டவர்களாயிருந்தும் மண முதலிய சுபாசுபக்கிரியைகளை ஒரே நாளில் விதிமுறை தவறாது அழகுற நடத்திப் பொருட்செலவைக் குறைத்துப் பெருமகிழ்ச்சியை யடைந்து வருதலேயன்றித் தம்பொருளையும் முயற்சியையும் கல்வித்துறையிலும் தொழில் முறையிலும் பயன்படுத்தி வருகின்றார்கள். நாமும் அவர்களது கொள்கையைப் பின்பற்றி மணமுதலியவற்றைத் தனித்தாவது சிலர் சேர்ந்தாவது ஒரே நாளில் சுருங்கிய செலவில் அழகுற நடத்தி யின்புறுதற்கு முயலல் வேண்டும். மற்றவர்கள் ஆலயங்களில் சுருங்

கிய செலவில் முடித்துக்கொள்ள முன்வந்துள்ளார்கள். நமது சமயத்தின் அடிப்படையான சுயவுரிமையானது அங்ஙனம் ஆலயங்களிற் செய்தற்கு இடங்கொடாமையின், நமது மஹாசங்கத்தின்கண் சுருங்கியதோர் செலவில் பெருகியதோர் கூட்டத்தில் அழகியதோர் காட்சியில் நம்மவரது மண முதலிய சுபக்கிரியைகளை முடித்துக்கொள்வதற்கு நம்மவரனைவரும் ஒத்த மனத்தராய்த் துணிதல் வேண்டும். இவ்விஷயத்தில் பெண் வீட்டாரும், புரோகிதர்களும், பொறுப்பாளர்களும் முயற்சியுடையவர்களாதல் வேண்டும். இதுவே மதசேவையும் சமூக சேவையுமாம்.

ஸ்ரீவீரசைவ பஞ்சாசாரிய பீடங்களும் அவற்றின் தோன்மையும்.

5-வது ஸ்ரீ காசி சமஸ்தானம்.

முத்தித் தலங்களுள் உத்தமத் தலமாக விளங்கும் ஸ்ரீ காசிமாநகரத்தின்கண்ணுள்ள ஜகத்குரு விஸ்வாராத்தியருடைய தருமபீடம் ஜங்கமவாடிமடம் என்றபெயருடன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இந்தப்பீடத்தின் தாபகராகிய விஸ்வாராத்தியருடைய அவதாரத்திற்கே காரணமாகிய ஸ்ரீ விஸ்வநாதலிங்கதேவாலயமும் ஆதிகாலத்தில் இவர்களுடைய ஆதீனத்திலிருந்தது. ஔரங்கஜீப் பின் காலத்தில் புராதன விஸ்வநாத தேவாலயம் அழிவடைந்ததே அது இவர்களுடைய கைதப்பிப்போவதற்குக் காரணமாயிற்று. இப்பொழுதிருக்கின்ற விஸ்வநாத தேவாலயம் இந்தூர் சமஸ்தான மகாராணி அகல்யாபாயியவர்களால் நூதனமாகக் கட்டப்பட்டு ஸ்மார்த்தர்களுடைய வசத்தில் கொடுக்கப்பட்டது.

இந்தப்பீடத்தின் பழமைக்கு ஆதாரமாகப் பல தானசாசனங்கள் கிடைத்திருக்கின்றன. விக்கிரமாப்தம் 631 கார்த்திகை சுத்தம் தேவோத்தான ஏகாதசி தினம் மகாராஜனாகிய ஜயநந்தன் என்ற அரசன் ஜங்கமபுரம் என்ற கிராமத்தை இந்தப்பீடத்தின் பசுபரிபாலனத்திற்காகத் தானமாகக் கொடுத்துள்ள சாசனம் இப்பொழுது மடத்தின்கண் இருக்கின்றது. இந்தத்தான சாசனத்தைக் கொடுத்து இற்றைக்குச் சுமார் 1353 வருஷங்களாகின்றன.

இந்தப்பீடத்தின் கிளைமடமொன்று நேபாளத்தின் பாககாம் என்ற கிராமத்தில் இப்பொழுதும் இருக்கின்றது. அந்த மடத்தில் விக்கிரமாப்தம் 692 (கி. பி. 639) வருஷத ஜேஷ்டசுத்த அஷ்டமியில் தேவநாகரத்தில் எழுதப்பெற்ற ஒரு சமஸ்கிருத சாசனம் இருக்கிறது இந்தச்சிலாசானத்தில் கங்காதேவியென்ற மனைவியுடனும் த்ரைலோக மல்லன் த்ரிபுவனமல்லன் என்றிரண்டு மக்களுடனும் கூடிய விஸ்வ மல்ல நிருபதியென்னும் நேபாளத்தின் மகாராஜன் தான் முதலில் சிவபக்தனுயிருந்து எக்காரணத்தினாலோ சிவபக்தியினின்று விலக, ஸ்ரீமல்லிகார்ச்சுன சுவாமிகள் என்பவர்கள் நேபாளத்திற்கெழுந்தருளித் திரும்பவும் தன்னைச் சிவபக்தனாகச் செய்தார் என்று சொல்லுகிறான். அன்றியும், தன்னுடைய வமிசத்தின் மூலபுருஷனாகிய ஜயருத்திரமல்லதேவன் என்பவன் சிவபக்தனாகி இந்த மடத்தின் வினியோகத்திற்காக அநேக பூஸ்திதியைத் தானங்கொடுத்திருக்கிறானென்றும், திரும்பவும் தானும் இப்படிப்பட்ட ஜமீன்களை மடத்தின் வினியோகத்திற்காகக் கொடுக்கிறேனென்றும் எழுதியிருக்கின்றான். இந்தச் சிலாசாசனத்தை எழுதிக்கொடுத்து இற்றைக்கு 1294 வருஷங்களாகின்றன. இந்தச்சிலாசானத்தை எழுதிக்கொடுத்த விஸ்வமல்ல நிருபதியினுடைய காலமே பழமையானதாயிருக்க அவனது மூலபுருஷனான ஜயருத்திரமல்லதேவன் காலம் அதினின்றும் எவ்வளவு பழமையானதாயிருக்கவேண்டும்? இப்பொழுது நேபாளத்திலிருக்கின்ற ஜங்கமவாடிமடம் சிறந்த வைபவத்துடனிருக்கிறது.

காசியிலிருக்கிற இந்தத் தரும பீடத்திற்கே அநேக இந்திய அரசர்கள் தான சாசனத்தைக் கொடுத்திருப்பதேயன்றி மொகலாய சக்கிரவர்த்திகளாகிய பாபர், அக்பர், ஹுமாயூன், ஜகங்கீர், ஔரங்கஜீப் முதலானவர்களும் அநேக தான சாசனங்களை எழுதிக்கொடுத்திருக்கின்றார்கள். அவைகள் அரபி பாஷையில் எழுதப்பெற்றுள்ளன. இந்த மொகல் சக்கிரவர்த்திகளுடைய 15-20 ச்சாசனங்கள் இப்பொழுதும் மடத்திலிருக்கின்றன. இந்து தர்மத்தின் விரோதியாகிய ஔரங்கஜீப் என்பவன் இந்த மடத்தை அழிக்கக் கருதிப் படையெடுத்து வர, ஸ்ரீஜகத்குரு மல்லிகார்ச்சுனசுவாமிகள் என்பவர் அநேக மகிமைகளைக்காட்ட ஔரங்கஜீப் கர்வமிழந்து தனக்குண்டான பிராயச்சித்தங்களை யெழுதி ஒரு சாசனத்தைக் கொடுத்திருக்கிறான். அதிலிருக்கும் விஷயங்கள் பீடத்தின் சிறப்பிற்குக் காரணமாயிருக்கின்றன.

இந்தப்பீடத்தில் விளங்கும்கற்கள் நாலாயிரம் வருஷங்கட்கு முற்பட்டனவென ஆங்கில சிற்ப நூலறிவாளர்கள் ஆராய்ந்து நிச்சயித்திருக்கின்றார்கள். இந்தப்பீடத்திற்கு 26 கிராமங்கள் இனமாக இருக்கின்றனவன்றியும் காசி நகரத்தின்கண் 300 மனைகளுடன்கூடிய மாநசசரோவரமும், 900 வீடுகளடங்கிய ஜங்கமவாடியும் இனமாக இருந்துவருகின்றன.

இந்தப்பீடத்தில் இப்பொழுது விளங்கிக்கொண்டிருக்கும் சுவாமிகளுடைய குருவாகிய **ஸ்ரீஜகத்குரு இராஜேஸ்வர சிவாசார்ய மகாஸ்வாமிகளவர்கள்** மகாதபோநிதியாக விளங்கினமையால் அவர்கள் காலத்தில் பாரதநாட்டறிவாளர்கள் இந்துஸ்தானத்தின் யோகிமண்டலத்தில் இவர்கட்கே தலைமைத் தானத்தைக் கொடுத்து அவர்களுடைய பாவசித்திரபடத்தை யோகிமண்டலத்தின் முதல்தானத்தில் சேர்த்திருக்கின்றார்கள். அன்றியும், 1911-வது வருஷத்தில் ஜார்ஜு சக்கிரவர்த்தியவர்கட்குப் பட்டாபிஷேகமாகுஞ் சமயத்தில் பிரசித்திபெற்ற காசி க்ஷேத்திரத்தில் ஒரு மகாத்மாவின் உற்சவத்தை நடத்தவேண்டுமென்று இந்திய கவர்மெண்டார் நிச்சயித்தபடி காசியில்மிகப் புகழ்பெற்ற இந்தப்பீடத்தின் மகாசுவாமிகளுடைய உற்சவத்தையே சர்க்காரார் அளவிறந்த சிறப்புகளுடன் நடத்திவைத்தார்கள். இந்த விஷயங்கள் வீரசைவர்கட்கே பெருத்த கௌரவத்தைக்கொடுக்கின்றன.

காஸ்யாம் விஸ்தரிதம்யேன வீரசைவ மதம் பரம்
தயாளு சிவயோகீச சோயம் ராஜேஸ்வரோயமி:

ஸ்ரீ 108 ஜகத்குரு மகா சிம்மாசனாதீஸ்வர சிவலிங்க சிவாசாரிய மகா சுவாமிகளவர்கள்.

இந்தச்சுவாமிகளவர்கள் சோல்லாபுரம் ஜில்லாவில் அவதாரஞ் செய்த கன்னடிகர். இப்பொழுது மகாசுவாமிகளுடைய வயசு சுமார் 65. தருக்க சாஸ்திரத்தில் ஒப்பற்ற பாண்டித்யத்தையடைந்திருக்கின்றார்கள். இவர்கள் பீடாரோகணமாகி சுமார் 25 வருஷங்களாகின்றன. இவர்கள் அதிகாரத்திற்கு வந்தபின்னர் மடத்தை மேன்மைக்குக்கொண்டு வந்திருக்கின்றார்கள். நமது வீரசைவமதத்

தில் இதுவரைக்கும் எவ்வளவு அறிவாளர்கள் காசியில் பயின்று சமஸ்கிருத பண்டிதர்களாகியிருக்கின்றூர்களோ அவர்களில் பெரும்பாலோர் இந்த பீடத்தின் ஆதரவினுலேயே பயின்று முன் வந்தவர்களாகின்றூர்கள்.

முற்றும்.

நமது வீரசைவத்தின் 5 இதழ்களில் பஞ்சாசாரிய பீடங்களின் தொன்மையையும் பெருமையையும் கன்னடமொழியில் எழுதப் பட்டுள்ளதை மொழிபெயர்த்துத் தமிழ்நாட்டாரனைவரும் உணரும்படி யெழுதி வந்தோம். இதில் முற்படச்செய்த திருவருளே பின்னும் சித்திரகல்துருவம் ஸ்ரீஜகத்குரு ஜபதேவமுருக ராஜேந்திரமகா சுவாமிகளுடைய மகா பீடத்தின் வரலாற்றினை மொழிபெயர்த்து எழுதிவர முன்னின்றுதவுமென எண்ணிக்களிக்கின்றோம். சுபம்.

ஸ்ரீ பொம்மபுரம்

சிவஞானபாலய தேசிகராதீன பீடமும் அதன் பெருமையும்.

2-வது சிவஞானதேசிக சிவாசாரிய சுவாமிகள் அற்புதச் செயல்கள்.

உரகந்தீண்ட மாய்ந்தவனையுயிர்ப்பித்தல்:—திருஞான சம்பந்தர் திருமருகலில் காதலனைக்கொண்டு களைகணைகத் தொடர்ந்து வந்து கதியிழ்ந்து கன்னிகையாதலின் தீண்டப்பெறுது தனித்து நின்று வருந்திய கற்புடைமாதின் கவலைக்கிரங்கி அரவந்தீண்ட மாய்ந்த மாதுலனுகிய வணிகனை யுயிர்ப்பித்ததுபோலவும், திருநாவுக்சுரசர் அரவந்தீண்ட இறந்த அப்பூதியடிகளார் குமாரனை யுயிர்ப்பித்தது போலவும் நமது சிவஞான தேசிகரும் காஞ்சிமா நகரத்தில் அரவந் தீண்ட இறந்தவொருவனை அங்குள்ள அன்பர்கள் வேண்டத் தமது திருக்கைத் திருநீற்றுல் உயிர்ப்பித்தருளினர். இதற்கு, " திளைக்குங் கருணைச் சிவஞானதேவன்றிருக்கைத் திருநீறே......விடத்திற் கருஞ் சீர்க்கனுழனும்." என்னும் கலம்பகச் செய்யுளே சான்றும்.

நரை முதிர் குழலைக் கருங்குழலாக்கல்:—சிவஞானதேசிகர் பொம்மபுரத்தின்கண் திருநீற்றுப் பிரசாதத்தால் பல நோய்களைப் போக்கி மகிமையுடன் விளங்குதலைக்கண்டு பொருமையுற்றுக் கூனி மேட்டிலிருந்த மாந்திரீகனொருவன் அப்பொழுது செஞ்சியையாண்ட திரியம்பக மஹாராஜனிடம் பொம்மபுரத்திலொருவர் சித்தரைப்போல நடித்து உலகத்தை வஞ்சிக்கின்றனர். அவரை நாட்டை விட்டகற்ற வேண்டுமெனக் கூறினன். அரசனோ இளமை தொடுத்து நரை முதிர்ந்த கூந்தலையுடைய தன் பெண்ணுடன் சுவாமிகளை யடைந்து நரையை மாற்றி இளமையாக்கியருள வேண்டுமென வேண்டிக்கொண்டனன். நமது சுவாமிகளும், ஞானசம்பந்தர் முயலகனென்னும் கொடிய நோயால் வருந்திப் பெண்தன்மை யிழந்துநின்ற சோழ மன்னன் புதல்வியை அந்நோயினின்றும் உய்வித்தமைபோல திருநீற்றாலாயே நரையை மாற்றி இளமை கொடுத்தருளினர். இதனை,

"இளைக்கு மருங்கு லொருமடந்தைக் கெய்து
தவளமுகிற் கூந்தல்
இருஞ்சூன் முகிலி னிருள்படைப்ப
விருண்ட வடியே னுளம் விளர்ப்பத்
திளைக்கு மலர்க்கட் கருணைமடை
திறக்குங் குணப்பொற் குன்றை யுயர்
சிகரமயிலைச் சிவஞான தேவன்
றனைநாடொறுங்காக்க."

"கரியவண் டிமிர்குவளை யிகலியங் கயல்வென்று
காதளவு மோடி மீளும்
கருநெடுங் கண்ணுடைய வொருமாது குழல்வெண்மை
கருமைசெய் திடுமிவற்குத்
திரியநின் மெய்யினிடை வருகருமையினை வெண்மை
செய்வதரிதன்று கண்டாய்
... ...
அருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுடன்
அம்புலீ யாடவாவே." இப்பிள்ளைத்தமிழ்ச்

செய்யுட்களா னறிக.

கடலைக்கடந்து கரையேறுதல்:—சமணர்கள் செய்த சூழ்ச்சியால் கல்லொடு பிணித்துக் கடலிற்றள்ளப்பட்ட திருநாவுக்கரசர் அஞ்செழுத்தையே புணையாகக் கொண்டு கரையேறித்தம் சமயவுண்மையை விளக்கியபடி நமது சிவஞானதேசிகரும் சூழ்ச்சியால் வெல்லக்கருதிய மாந்திரீகனுடன் திரியம்பகவரசனால் கடலிற்றள்ளப்பட்டு அவற்கு முன் கரையேறி நின்று அவனது வேண்டுகோளால் மீன்வாய்ப்பட்ட மாந்திரீகனை யுயிர்ப்பித்து நல்லறிவு புகட்டி அவனைத் தம்அடியவனாக்கி வீரசைவசமயவுண்மையை நிலைநாட்டினர். இச்செயற்கருஞ்செயற் கறிகுறியாக அவ்வரசனால் கொடுக்கப்பெற்ற பலவிருதுகளுடன் எவ்விடத்துங் காணப்பெறாத இரண்டு மகரத்துவஜங்கள் (மீனக் கொடிகள்.) இம்மடாலயத்தின்கண் இப்பொழுதும் விளங்குகின்றன.

(தொடரும்.)

சிவப்பிரகாச சுவாமிகளும் அவர் நூல்களும்.

திரு. பண்டிதர், அ கந்தசாமி பிள்ளையவர்கள்,
(தமிழ் விரிவுரையாளர் அரசியலார் கல்லூரி, கும்பகோணம்.)

சோணசைல மாலை.

பெரிய புராணக் கதைகள்.

இனி, பெரிய புராணக் கதைகளைத்தமது கவிகளில் அமைத்துப் பாடிய ஒப்பரும் பெரும் புலவர் நமது சிவப்பிரகாச சுவாமிகளே. இவ்விஷயத்தில் ஒப்புநோக்குங்காலையில் ஏனைய புலவர்கள் எல்லாம் இவர்க்குப் பின்வாங்குவர். இது சம்பந்தமாய்ச் சீர்தூக்கின் குமரகுருபர அடிகள், ஆசிரியர் மாதவச் சிவஞான யோகிகள், கச்சியப்ப முனிவர், பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களாகிய இவர்களின் கவிகளிலெல்லாம் பெரிய புராணக் கதைகள் எங்கோ ஒவ்வொன்று காணப்பட இவர் கவிகளில் அடிக்கடி அவை விரவி விரவி வருவதையறிய நமக்கு எவ்வளவோ பெருமிதம் உண்டாகிறது.

சோணசைல மாலையில் பெரிய புராணக் கதைகள் பத்து இடங்களில் வருகின்றன. திருஞானசம்பந்தமூர்த்திகளைப்பற்றியவற்றில், "சோணசைலக் கடவுளே! சம்பந்த மூர்த்திகளுக்குப் பொற் கிண்ணத்தில் பால் கொடுத்தருளினீர், அடியேனுக்கு அக்கிண்ணங்கழுவிய தண்ணீரை வார்க்கச் சொல்லினும் போதும் என்கிறார். அது,

"இழை யெனத் தளர்சிற் றிடையுண முலையா
ளெனக்குவண் புகலிவேந் தயின்ற
கழுமணிப் பசும்பொற் குலவுபாற் கிண்ணங்
கழுவுநீர் வார்ப்பதற் குரையாய்." (45. செ)

சம்பந்த சுவாமிகள் நல்லூர்ப் பெருமணத்துக்கு வந்தாரனைவர்க்கும் முத்தி கொடுத்தமையை,

"வினையரும் புகலிக் கிறைமணப் பந்தர் விருந்தினுக்
குதவிலேன் முந்திற்று
உனையிரந் திடுவான் வந்தனன் பதநீ
யுதவியென் றுயரொழித் தருளாய்." (26. செ.)

என்று கூறுகிறார்.

இனி மலை வர்ணனை கூறும் பின்னடிகளிலும் சம்பந்த சுவாமிகளுக்குத் திருப்பட்டீச்சுரத்தில் முத்துப்பந்தல் கொடுத்தருளியதையும் கூறுகின்றனர். அது,

"முயங்குமா புகழ்ப்பூம் புகலியந் தணர்க்கு
முத்துவெண் பந்தரீந் தகல்வான்
தயங்குமீன் முத்துப் பந்தர்வாழ் சோண
சைலனே கைலைநா யகனே." (28. செ)

என்பதாம்.

சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமது பதிகங்கள் ஒவ்வொன்றினும் எட்டாம் திருப்பாசுரத்தில் பிரம விட்டுணுக்களடிமுடி கண்டறியாத தன்மையைக் கூறியருளினமையைப் பாராட்டி அத்திருவிளையாடல் நிகழ்ந்த இடம் நம் சோண சைலமாகலான், அவர் பாடல் பெற்ற எல்லாத் தலங்களினும் கலந்து நிற்கும் ஒப்பருந் திருத்தலம் இம்மலையென்பதை,

"பூம்பொழிற் புகலிக் கிறைவனு னிலஞ்சேர்
புண்ணியத் தலங்களி னடைந்து
தாம்புனை பதிகந்தொறும் புகழ் சோண
சைலனே கைலைநா யகனே." (58. செ.)

என்றும் கூறுகின்றனர். (தொடரும்.)

உண்மையுணர்வு.

(திரு. லா. சா. வைத்திலிங்க அய்யர் அவர்கள், பெருவளநல்லூர்.)

(தொடர்ச்சி.)

உலகத்தை நோக்குங்கால் தரை, நீர், தீ, காற்று, வெளி, என்னும் ஐம்பெரும் பூதங்களும் அவைகளுக்கு மூலமாகவுள்ள நாற்றம், சுவை, ஒளி, உணர்ச்சி, ஓசை யென்னும் தன் மாத்திரைகளைந்தும் சேர்ந்து தூல தேகத்துடன் கருப்பை, முட்டை, புழுக்கம், வித்து ஆகிய இவைகளினின்றுந்தோன்றி தேவர், மனிதர், விலங்கு, பறவை, நீர்வாழ்வன, தாவர மென்னும் எழுவகைப் பேதங்களில் பலயோனி பேதங்களாகக் காணப்படுகின்றன. இவைகளைச் சுருங்கச் சொல்லில் அவன், அவள், அது வென்னும் மூன்று பகுதிக்குள்ளடங்கும். இவை தோன்றியும், நின்றும், ஒடுங்கியும், காணப்படுகின்றன. உயிர் போக்குவரத்தாக இருப்பதால் உயிர் தங்கிய உடலைச் சடம் என்றும், உயிரைச் சித்தென்றும் சொல்லுகின்றோம். உடலில் உயிர், உயிரில் கடவுள் என்பதில் உடலில் உயிர் என்பது வெளிப்படை. உயிரில் கடவுளென்பதைச் சற்று ஆராய்ச்சி செய்யின் உணரலாம். உதாரணங்களால் தான் நினைப்பூட்டவேண்டும். உண்மைப் பொருளில் உள்ள குணங்கள் எல்லாவற்றையும் உதாரணப்பொருளில் காட்ட முடியாது. திருட்டாந்தமாக, ஆவாரம்பூ நிறத்தைப்போன்றது தங்கமென்றால், மாத்து, கனம், மதிப்பு பூவில் காணமுடியாது. உண்மைப் பொருளை நேரில் காணில் எல்லா குணங்களும் ஒருங்கே காணமுடியும். நல்ல நூலைப்பயின்றதாலும் நல்லார்பால் கேட்டதாலும் உண்மை விளங்காது. கேட்டபடி நின்றால் உண்மை விளங்கும். “நல்ல நூல் பல கற்பினுங் காண்பரிதே யெல்லையில்லாச் சிவம்.” என்றனர் நமது ஔவைபிராட்டியாரும்.

உண்மையைக்காண ஆராய்வோம். உலகம், உயிர், கடவுள் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். ஆன்மா அநாதியில் ஆணவ மலத்திலழுந்திற்று. ஆணவமலம் ஆன்மாவிற்குக் கன்மத்தில் விருப்பத்தைக் கொடுத்தது. அந்தச் செய்தியைக் கர்த்தா இரக்கத்தினலறிந்து கன்மத்துக்கேற்ற புவனத்தில் விட்டு விரும்பிய கன்மத்தைக் கூட்டிப் புசிப்பித்தார். இதுவே அநாதியில் பிரபஞ்ச முண்டாகிய முறைமை.

ஆன்மாவிற்கு ஆணவமலம் அநாதியாக இயற்கையோ? செயற்கையோ? இயற்கையானல் பாலுக்கு வெளுப்புங் கரிக்குக் கறுப்பும் ஒரு காலத்திலும் நீங்காததுபோல் ஆன்மாவிற்கு ஆணவமலமும் ஒரு காலத்திலும் நீங்காது. ஆனதினுலியற்கை யன்று. செயற்கையானுல், வெள்ளைப் புடவைக்கு அழுக்கேறுதல் போல மோட்சத்திலும் ஆணவமலம் வந்து பொருந்தும். ஆனதினுல் செயற்கையுமன்று. இனித் திருட்டாந்தமெப்படியெனில், நெல்லிற் குமியும், செம்பிற்குக் களிம்பும்போல் அநாதி செயற்கை அநாதி சையோக மென்றலுமாம்.

ஆன்மாவிற்கு ஆணவமலத்தைக் கர்த்தா கூட்டினுரோ? அல்லது மலம் தானே வந்து கூடிற்ருே? கர்த்தா நின்மலராகையினுல் அவர் கூட்டினதன்று. மலம் தானே வந்து பிடித்ததென்ருலோ ஆணவமலஞ் சடமாகையினுல் அது தானே வந்து பிடிக்காது. இனித் திருட்டாந்தமெப்படியெனில் ஆன்மாவே ஆணவமலத்திலழுந்திற்று. ஆன்மாவிற்குக் கன்மத்திலே யுண்டாகிய விருப்பம் கடவுள் கொடுத்த விருப்பமோ? அல்லது ஆன்மாவிற்குள்ள விருப்பமோ? ஏன் பாவத்தைச் செய்தாய் என நரகத்திலிட்டு வருத்துவதாலும் கன்ம நிவர்த்தி வந்த காலத்தில் விருப்பத்தைக் கொடாதபடியினுலேயும், கடவுள் கொடுத்த விருப்பமன்று. நல்வழி யிருக்கத் தீய வழியிலும் நடத்தலால் ஆன்மாவிற்குள்ள விருப்பமுமன்று. இனிச் சித்தாந்தம் ஆணவமலமே ஆன்மாவிற்குக் கன்மத்தில் விருப்பத்தைக் கொடுத்ததென்பதாம். ஆணவமலஞ் சடமாகையினுலே அதற்குச் செய்தியில்லையெனில் கள், பாஷாணம், தீ, காற்று, நீர் முதலிய சடங்களுக்குச் செய்தியுண்டாதலால் ஆணவமலத்திற்குஞ் செய்தியுண்டு. விருப்பத்தைக் கொடுத்த ஆணவமலமும் ஆன்மாவிற்குக் கன்மத்தை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பின ஆன்மாவுங் கன்மத்தை யறிந்தெடுத்துக்கொள்ளமாட்டாது. விரும்பப்பட்ட கன்மமும் ஆன்மாவை யறிந்தெடுத்துக் கொள்ளமாட்டாது. விரும்பப்பட்ட கன்மமும் ஆன்மாவை யறிந்து வந்து பொருந்தமாட்டாது. ஆனுல் கர்த்தா இரக்கத்தினுலறிந்து விருப்பத்திற்கேற்ற தனுவைக்கொடுத்து அந்தத்தனுவினிடமாகக் கன்மத்தைக்கூட்டிப் புசிப்பிப்பார் ஆணவமலமே ஆன்மாவிற்குக் கன்மத்தில் விருப்பத்தைக் கொடுத்த தென்பதற்குக் காட்டும் உவமைகள் வருமாறு :—

குழந்தைக்குப் பாலிலே யுண்டாகிய விருப்பந் தாய் கொடுத்த விருப்பமோ? குழந்தைக்குள்ள விருப்பமோ? தாய் பால் கொடுத்த நேரமெல்லாங் குழந்தை குடியாதபடியினுலே தாய் கொடுத்த விருப்ப

மன்று. பாலை எந்நேரமுமிடை விடாமற் குடியாதபடியினாலே குழந்தைக்குள்ள விருப்பமுமன்று. இனி உண்மை யாதெனில் பசியே குழந்தைக்குப் பாலிலே விருப்பத்தைக் கொடுத்ததென்பதாம். விரும்பின குழந்தையும் பாலை யறிந்தெடுத்துக் குடிக்கமாட்டாது. விரும்பப்பட்ட பாலுங் குழந்தை வாயிலே வந்துபொருந்தமாட்டாது. ஆனால் தாயானவள் இரக்கத்தினாலறிந்து பாலை யெடுத்துப் பாலடையில் விட்டுக் கொடுப்பாள்.

குழந்தை பசி, பால், தாய், பாலடையாக ஐந்து. குழந்தையைப் போலும் ஆன்மா. பசியைப்போலும் ஆணவமலம். பாலைப்போலும் கன்மம். தாயைப்போலும் கடவுள். பாலடையைப் போலும் உடம்பு.

உடலுடன் உயிர் சேர்ந்து விருத்தியாகி உயிரும் உடலும் பேதம் தெரியாமலிருக்கும். உடல் வேறு உயிர் வேறாகப் பிரிந்தால் பிணவுடலைக் காண்போம். உயிரைக் காண்பது அரிதே. உயிரைக் காண வேண்டில் உடல் உயிர் சேர்ந்து வாழுங் காலத்திலேயே விசாரித்தறிதல் வேண்டும். உயிரைப்பற்றி யாராய்வோம்:—தனக்கு அன்னியமாகிய பொருளை யெல்லாம் என் வீடு, என் மாடு, என் மனைவி, என் மக்கள், எனதுவுடைமைஎன்றுசொல்வதெல்லாம் தனக்கு அந்நியமே. இதுபோலவே என் உடல், என் கரணம், என் அறிவு. என் உயிர், என் அஞ்ஞானம் என்று சொல்வதில் எனது என்றவனே ஆன்மா. இந்த ஆன்மா தினம் மூன்று உடலில் வசித்து வருகிறான். ஆன்மா தூல தேகத்துடன் பொருந்தி நினைவுடன் இருக்குங்கால் இன்ப துன்பங்களை யனுபவிக்கிறான். தூலதேகத்தைவிட்டுக் கனவுடலில் நினைவுடலிற் கண்டதைக் கண்டு இன்ப துன்பங்களுடன் விவகரிக்கிறான். காரணவுடலாகிய (நுண் உடலில்) ஆன்மா தங்கி மயக்கத்துடன் சேர்ந்து இன்புறுகிறான். நினைவில் ஆன்மா கனவையும் நுண் உடலில் தங்கியனுபவித்த இன்பத்தையும் கருதுகிறான். இந்த மூன்று அவஸ்தைகளையும் அனுபவிக்கின்றவனே ஆன்மா. ஆன்மாவுடன் கடவுள் எப்படிக் கலந்து ஆன்மாவாகிற உயிர்களை நடத்துகிறாரெனில் உயிர் உடலுடன் சேர்ந்து இருப்பதுபோல் உடனாயும், அயர்ந்த தூக்கத்தில் பிரிந்து இருப்பதுபோல் வேறாயும் கனவில் உடனாயும் வேறாயும் இருப்பதுபோல் உயிருடன் கடவுள் சேர்ந்தும், பிரிந்தும், சேர்ந்தும் பிரிந்தும் இருக்கிறார். எதுபோலெனில் உடலும் உயிரும் போல் சேர்ந்தும், கண்ணும் ஆதித்தன் போல் பிரிந்தும், கண்ணும் கருத்தும் போல் சேர்ந்தும் பிரிந்தும் இருக்கிறார் கடவுள் உயிர்களுக்கு எப்படித் தனுகரணங்களைக் கொடுத்து அருள்

செய்கிறெனில் நாற்காலியைச் செய்தவன் தச்சன். தச்சன் எதைக் கொண்டு செய்தான்? மரத்தைக்கொண்டு செய்தான். யாருக்காகச் செய்தது? மக்களுக்காக. மக்களிடத்திலிருந்து பெற்றதென்ன? கூலி. கூலி யெதற்கு? ஜீவிப்பதற்கு. இவற்றை ஆராய்வாம். நாற்காலி உடல்; தச்சன் கடவுள்; மரம் மாயை; வேண்டினவர்கள் உயிர்கள்; கூலி உயிர்கள் கடவுள்பால் வைத்த அன்பு; ஜீவனம் ஆனந்தம். இந்த அனுபவத்தைக் கண்ட வாதவூரடிகளும், "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா யார் கொலோசதுரர், அந்த மொன் றில்லா ஆனந்தம் பெற்றேன் யாது நீ பெற்ற தொன்றென்பால்." என்றார்.

உயிர் உடலைச்சேர்ந்தால் இன்ப துன்பமும் கடவுளைச் சார்ந்தால் இன்பமும் உண்டாம். உதாரணமாக:—விவகார வேளையில் துன்பமே. தூக்கத்தில் இன்பமே.

ஓர் கனியைக் கண்டவுடன் உள்ளம் கவர்கிறது. கனியைப் புசித்த மாத்திரத்தில் உருசியை யனுபவிக்கின்றது. உருசி நிறைந் தால் திருப்தியடைகிறது. இதைப் புலன்கள் வாயிலாக அடைந்து திருப்தியடைவது உயிர். உயிர்கள் தமது வினைக்குத் தகுந்தபடி இன்ப துன்பங்களை யனுபவிக்கச் செய்தவர் கடவுள். எவ்வாறெனில், ஓர் புலன் கெட்டால் உயிர் சரிப்படுத்திக்கொள்ள முடியாமையாலும் கனியைப் படைத்ததும் இவன் செயல் இல்லாமையாலும் இயற்கை யாக உள்ள வுயிர்க்கு இயற்கையாகவுள்ள மாயையிலிருந்து இயற்கை யாகவுள்ள கன்மத்தைப்பார்த்துத் தனது திருவருளால் ஊட்டிவைக் கிறார். எதுபோலெனில், ஆதித்தன் தனது கிரணத்தால் இடத்திற் குத்தகுந்தபடி பக்குவப்படுத்துகிறான். சேறு இறுகவும், வெண்ணை கரையவும், தாமரை மலரவும், அரும்பவும், உலரவும், மிதமான உஷ்ணத்தையும் தருகிறது. சூரியகாந்தக் கண்ணாடியின் வாயிலாகத் தீயைக்கக்குகிறது. மழையையும் அச்சூரியன் உண்டாக்குகிறது. ஆனதால் ஆதித்தன்பால் படைத்தல், காத்தல், அழித்தல், மூன்றும் தனது கிரணங்களால் நடக்கினும் சூரியன் சாட்சிவடிவமாக இருக்கி றான். சூரியன் கண்ணுக்கு எப்படி உதவியாக இருக்கின்றானோ அதுபோல கடவுளும் உயிர்களுக்கு எல்லாவகையிலும் அம்மையாக வும், அப்பனாகவும், நன்மருத்துவனாகவும்இருந்து உதவுகின்றார். அடுத்த சஞ்சிகையில் தத்துவசோதனையுடன் திருவருள்திறத்தைக்காட்டி விளக்கப்படும்.

வாழ்த்துரைச் செய்யுட்கள்.

ஸ்ரீ பாளஹள்ளி சிம்மாசனத்தைச் சார்ந்த பவித்திரம் மடாலயம் அல்லமாப்பிரபு சுவாமிகள் பரம்பரை குரு சாமியார் ஸ்ரீமத் ப. அப்பாவையர் அவர்கள் மனமுவந்தனுப்பிவைத்தவை.

---

1. நித்தமாஞ் சாமவேதம் நெறியெலாம் விளங்கக் கூறுந்
தத்துவ மசியி னுண்மைத் தரித்திடும் வீரசைவம்
அத்தமா னந்தா னில்லா வருட்சிவ பாநுவென்ன
இத்தல மெங்கு மென்று மிசைவுற வாழ்க வன்றே.

2. செந்தமிழ் முனிவ னுக்குச் செப்பிய வீர சைவம்
அந்தமு மாதி யில்லா வரன்மொழி யாத லாலே
கந்தமா மலரோ னுள்ளங் கண்டிடு முலக மெல்லாம்
சிந்தையின் மகிழ்ந்து கேட்கத் தேசொடு மலர்கவென்றும்.

வீரசைவம் க, உ, ௩ இதழ்களைப் படித்துக் கழகத்தாரது முயற்சிக்குப் பெரிதும் மகிழ்கின்றேன். கட்டுரை எழுதிக் காப்பதாக முன்வந்துள்ள ஆசிரியர்களும் உண்மைத் தொண்டர்களும் கடலென நிறைவுற்று மேருவென வுயர்ந்தோங்குகவென எமதேசு நாயகனை யிறைஞ்சுகின்றேன். சுபம்.

இங்ஙனம்

குருசாமியார், ப. அப்பாவையர்.

தமிழ் நாட்டு நிகழ்ச்சிகள்.

திருநெல்வேலி வீரசைவ சமயாபிமான அபிவிருத்திசங்கம்.

திருவருட் செயலால் இச்சங்கத்தின் இரண்டாவது மகாநாடு திருநெல்வேலி கம்பாநதி மண்டபத்தின்கண் 7, 8—4—29 இவ்விரு தினங்களிலும் திருச்சினப்பள்ளி ஜில்லா. முசிரி உயர்தர கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும் 'வீரசைவம்' பத்திராசிரியருமான வீரமாகேச வி. குமாரவீரய்யரவர்கள் தலைமையின்கண் நடைபெற்றது.

7—4—29 மாலை 3-மணிக்குச் சங்கத்தார் திருவாளர், திருகூட சுந்தரம் பிள்ளை M. A. அவர்களுடன் தலைவரவர்களை வரவேற்று இராஜ வீதியின் வழியாகப் பல வீரசைவ அபிமானிகள் சூழ நகர் வலம் செய்வித்துச் சங்க மண்டபத்திற் கழைத்துச் சென்றனர். அவ் வமயம் பல அதிர்வெடிகள் போடப்பட்டன. தலைவர் ஆசனத்தி லமர்ந்தவுடன் பிள்ளையவர்கள் மாலை சூட்டினுர்கள். கடவுள் வாழ்த் துக் கூறியவுடன் தலைவர்க்கு வரவேற்பு வாழ்த்துப்பா காரியதரிசி யால் வாசித்துக் கொடுக்கப்பெற்றது-

தலைவர் முன்னுரையாக இச்சங்கத்தினேக்கம் நம் சமயச் சார்பு பற்றியதாகவும் சமூக முன்னேற்றத்திற்கு வழித்துணையாகவும் இருத்தல்வேண்டுமென்றும், இவற்றிற்கு ஒற்றுமையே காரணமென் றும், சமூக முன்னேற்றத்திற் குழைப்பவர் சமயச் சார்புபற்றி நிற்றல் வேண்டுமென்றும், சமயவளர்ச்சிக்குச் சமயாச்சாரியர் பீடங்களே ஏற்ற துணையாகலின் குடந்தை ஸ்ரீசாரங்கதேவர் மடாலயத்தின் அபிவிருத்தியில் இச்சங்கத்தார் முழு நோக்கஞ் செலுத்த வேண்டு மென்றும் தெளிவான செந்தமிழ் நடையில் விளங்க வுரைத்தனர். அன்றியும், தென்னுட்டுச் சைவர்களினும் வடநாட்டில் வீரசைவர்கள் ஜனத்தொகை செல்வாக்குப் பதவி முதலியவற்றுலும் உயர்ந்த நிலையி லிருப்பதற்கு அங்குள்ள வீரசைவ சமயாச்சாரிய பீடங்களும் பீடாதி பதிகளின் முயற்சிகளுமே காரணமென்றும், வீரசைவர்களுக்கெனப் பல பாடசாலைகளும் பத்திரிகைகளும் பல வரிய செயல்களைச்செய்து வருகின்றனவென்றும், 40 லக்ஷம் வீரசைவர்களில் 9 அரசர்க ளிருக்கிறுர்களென்றும், அகில பாரத வீரசைவ மஹா சங்கம் 20 வருடங்களாகச் செய்து வந்த முயற்சியால் பல நன்மைகள் விளைந் திருக்கின்றனவென்றும், அதுபோல் இந்நாட்டிலும் பலவிடங்களிற் பலமுறை சங்கங்கூட்டி நாமும் அவர்களைப் போலவே பலதுறைகளி லும் முன்னேற்றமடைய முயலவேண்டுமென்றும் யார்க்கும் ஊக்க முண்டாக விரிவுரை நிகழ்த்தினுர்கள்.

பின்னர், திருகூடசுந்தரம் பிள்ளையவர்கள் 'அறம்' என்ற தலைப்பின் கீழ்ப் பேசத் தொடங்கி யான் சைவ மரபிற்றேன்றியவனு யினும் இக்காலத்தவர் சமயக்கொள்கைகளும் பிடிவாதங்களும் உண்மைக்கு மாறுன கொள்கைகளென்று தோன்றுகின்றமையால் திருநீறு தரித்தல் முதலிய உண்மை யுணராக் கொள்கைகளை விடுத்து

நம் சகோதர ஏழை மக்களுக்கு இயன்ற வுதவிகளைச் செய்யுமுறையில் நிற்கின்றேனென்றும், மனத்துக்கண் மாசிலனாதலே அறமென்றும், தமக்கெனவோர் பொருளிலும் பற்றுதலின்றிக் கிடைத்தவற்றைச்சக்தியற்ற மக்களுக்குக்கொடுத்துதவலே மாசிலனாதலென்றும், நாட்டின் முன்னேற்றத்திற்குக் கதருடையுடுத்தலே கடமையென்றும் விரிவுரைச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். திருவாளர், சுந்தர பண்டாரமவர்கள் சமூக முன்னேற்றத்தைப்பற்றிப் பேரன்புடன் பேசினார்கள்.

முடிவில், தலைவரவர்கள், 'சபையோர்களே! நண்பர் திருகூட சுந்தரம் பிள்ளையவர்களை முன்னர் நேரிற் காணாவிடினும் பத்திரிகை வாயிலாக அவர் பேசுந் திறத்தையும் உண்மைக் கருத்தையும் அறிந்து மகிழ்ந்துள்ளேன். அவர்கள் தமக்குத் தோன்றிய வுண்மை வழியில் நடப்பவர்களென்றும், எக்கொள்கையாயினும் உண்மைக்கு மாறாயவற்றைத் தாம் மேற்கொள்வதில்லையென்றும், அதனால் தமக்குத் திருநீறு முதலியவற்றில் நம்பிக்கையில்லையென்றும், பற்றறக்கிடைத்தவற்றைப் பிறர்க்குக் கொடுத்தலே அறம் என்றும் உரைத்தார்கள். அவர் உரையின் உண்மைக் கருத்தை யுணராது இந்த வீரசைவ சமயாபிமான அபிவிருத்தி சங்கத்தில் வீரசைவர்கட்குரிய அட்டாபரணங்களில் முதலாவதாகிய திருநீற்றைத்தரித்தல் வேண்டாமென்று இகழ்ந்துரைத்தாரென்றாவது சைவ சமயத்தில் பற்றில்லாதவரென்றாவது நீங்கள் கருதலாகாது. ஆனால் சைவ சமயத்திற்குரிய திருநீறு முதலிய சாதனங்களின் உண்மைக் கருத்துக்களை சைவாபிமானிகளுணர்ந்திருத்தல் வேண்டுமென்பதும், தம்போன்ற சைவ மரபிற்றோன்றியவர்கள் வினவும் வினாக்களுக்கே விடை கூறி உண்மையை விளக்க அறியாச் சைவப் பெரியார்களா பிறநாட்டுப் புறச்சமயிகள் வினவும் வினாக்களுக்குத் தக்க விடை கூறிச் சமயவுண்மையை நிலைநாட்டவல்லவராவர்? வினாக்களுக்கு ஏற்ற விடை கூறி சமய வுண்மையை நிலைநாட்டி மக்களனைவரையும் ஒப்பாகக் கருதும் உண்மைப் பெரியார் பலர் தோன்றவேண்டுமென்பதும்தான் பிள்ளையவர்களுடைய நோக்கமேயன்றி சைவ சமயக் கொள்கைகளையாவது, சாதனங்களையாவது இழித்துக் கூறவேண்டுமென்பது அவர்கள் கருத்தன்று. திருநீறு முதலிய சாதனங்களின் உண்மைக் கருத்துக்களை யுணர்த்தி மக்களனைவரையும ஒப்பாகக் கருதி யுயர்த்தவேண்டியுபகாரச் செயல்

களைச்செய்ய முன்வரும் உண்மைப் பெரியார்களைக் காணின் பிள்ளையவர்களும் திருநீறு முதலியவற்றை யணிந்து கொள்வார்களென்பது எனக்குத் தோன்றுகின்றது.

பெரியோர்களே! இறைவனாகிய சிவபெருமான் தம்மால் படைத்துக் காக்கப்பட்ட வுலகத்தை முடிவில் அழித்து நீறாக்குகின்றார். அந்நீற்றையே சத்தியும் சிவமுமாகித் தனித்து நின்று தம்முடலிற் பூசி மகிழ்கின்றார். மீட்டும் தம்மிடத்தடங்கிய வுலகத்தைப் படைத்துக் காக்குங்கால் தம் முடலிற்றரித்துள்ள திருநீற்றின் உண்மைத் தன்மையை மக்களாகிய நாமனைவருமுணர்ந்து நம்மால் காணப்படும் உலகப்பொருள்களனைத்தும் இறைவனால் படைத்துக் காத்து அழிக்கப்படும் நிலையற்ற இயல்புடையனவாதலின் நம் வினைக்கீடாக அவ்விறைவனால் கொடுக்கப்பட்ட நிலையில்லாப் பொருள்கள் நம்மிடம் நிலைத்திருக்கும் பொழுதே பிறர்க்குக் கொடுத்துதவலாகிய அறத்தைச் செய்து அதனால் நிலைபேறுடைய முத்தியின்பத்தைப் பெற்றுய்தலே நம்மிறைவனது நோக்கமென்பதை நாமிடைவிடாது சிந்தித்துச் சமயவுண்மையாகிய அறஞ்செய்ய வேண்டியே நமது சைவப் பெரியார்கள் இறைவனது உடலிற்றரித்த திருநீற்றை நமது நெற்றி முதலிய அங்கங்களிற் றரிக்கும்படி விதித்திருக்கின்றார்கள். இதன் உண்மையையறியாது திருநீறு முதலிய சாதனங்களை யணிந்ததனாலேயே சைவ சமயிகளாயினோமென்று கருதி பிறர் நலங்கருதாது தந்நலங்கருதித் தருக்கி நிற்பவர்களா உண்மைச் சைவ சமயப் பெரியார்களாவர்? ஆதலின் இதுவரை கூறியவாற்றான் வீரசைவ சமயாபிமானிகள் திருநீறு முதலிய எண் வகைச் சாதனங்களின் உண்மையை யுணர்தல் வேண்டும்; உணர்ந்து அவற்றை யன்புடன்றரித்தல் வேண்டும்; மக்களனைவரையுந் தம்மோடொப்பக்கருதல் வேண்டும்; தமக்குக்கிடைத்த பொருளைக்கொண்டு பிறர்க்குக் கொடுத்து உபகரித்தல் வேண்டும்; இதுவே நமது சமய வுண்மையென உணர்தல் வேண்டுமென்பன அறியலாயின.'' என முடிப்புரை கூறினார்கள். இரவு 9-மணிக்கு முதனாள் கூட்டம் நிறைவேறிற்று.

8—4—29 மாலை 2 மணிக்குச் சபை தொடங்கப் பெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் தீர்மானிக்கப்பெற்றன. புகைப்படம் எடுக்கப்பெற்றது. தலைவர்கள் வீரசைவ சித்தாந்த சமய வுண்மைகளை யாவருமெளிதினுணருமாறு விரிவுரையாகப்பேசிச் சங்கத்தை

இனிது நிறைவேற்றினுர்கள். சங்க நிரந்தரத் தலைவரவர்கள் திருவாளர், வேலாயுதம் பண்டாரமவர்கள் தலைவர் முதலியவர்களுக்கு வந்தனோபசாரம் கூறினுர்கள். சங்கம் இனிது நிறைவேற உடைவர் அபிஷேகமும், சிலருக்கு இலிங்கதாரண தீக்ஷையும் நடைபெற்றன.

தீர்மானங்கள்.

1. கும்பகோணம், பெரிய மடம் ஸ்ரீசாரங்க தேவர் வீரசிங்காதன பீடத்திற்கு விரைவில் தலைவரை நியமிக்கவேண்டுமெனச் சித்திர கல்துருவம், ஜகத்குரு ஸ்ரீமந் நிரஞ்சன ஜபதேவ முருகராஜேந்திர மஹாசுவாமிகளுக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று,

2. இவ்வருடத்தில் நடக்கும் சென்னைச் சட்டசபைத் தேர்தலில் வீரசைவர்களில் கற்றுத்தேர்ந் தனுபவமுடைய பெரியாரொருவரைத் தேர்ந்தெடுக்க கனம்| கவர்ன்மெண்டாரை வேண்டிக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று.

3. வீரசைவ ஏழை மாணவர்களின் உதவிக்காக பிடியரிசி முதலியவற்றுல் ஒரு மூலதனம் சேர்க்கவேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று.

4. தென்னுட்டிலுள்ள கும்பகோணம் மடத்தின் சிஷ்யர்களாகிய பண்டாரத்தாரனைவரும் ஸ்மார்த்தரைக்கொண்டு சுபாசுபங்களைச் செய்யாது தாரணம் பெற்ற உடையவரைக் கொண்டாவது வீரசைவ மாகேசரைக்கொண்டாவது செய்துகொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று.

5. திருச்செந்தூரில் திருநெல்வேலி முதலிய 11 ஊரார்களுக்கேயன்றி மற்றவர்களுக்கும் உபயோகப்படும்படி ஓர் மடத்தைப் பழய மடத்தோடாவது தனித்தாவது கட்டுவிக்கவேண்டுமென்றும், சுப காரியங்களில் ரூபாய் 3—0—0ம் அசுப காரியங்களில் ரூபாய் 1—0—0ம் கொடுத்து மூலதனம் சேர்க்கவேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

இங்ஙனம்

பிச்சாண்டி பண்டாரம்,

காரியதரிசி.

(தன்னறிவிற்) கு எட்டாத ஞானரூபமாகிய சிவனுடன் ஐக்கியமுற்றிருப்பது நின்மல துரியாதீதமென்றும், இவைகள் ஒன்றுக்கொன்று சூக்ஷுமமாக இருக்குமென்றும் சிலர் உரைப்பர். இதனைச் சிவபெருமானது காருண்யத்தாலே இலாடத்தானத்திற் சாக்கிராவத்தையில் நிற்பவர் தாமே மோக்ஷமடைதல் காரணமாக ஆசாரியர் உபதேசக் குறிப்பின்படியே நின்று நின்மல பஞ்சாவத்தையும் பொருந்திச் சமாதியிலிருப்பார்களென்றும், இதற்குச்சாக்கிரமே பீடமென்றுங்கூறுவாருமுளர். இன்னுஞ் சிவாசிவதத்துவமைந்தும் நின்மல சாக்கிர முதலிய ஐந்தாயிருக்குமென்றும், நின்மல சாக்கிரத்தில் சுத்தவித்தை-ஈசுவரம்-சாதாக்கியம்-சத்தி-சிவம் ஐந்தும் நிற்குமென்றும், நின்மல சொற்பனத்தில் ஈசுவரம்-சாதாக்கியம்-சத்தி-சிவம் நான்கும் நிற்குமெனவும், நின்மல சுழுத்தியில் சாதாக்கியம்-சத்தி-சிவம் மூன்றும் நிற்குமெனவும், நின்மலதுரியத்தில் சத்தி-சிவம் இரண்டும் நிற்குமெனவும், நின்மல துரியாதீதத்தில் சிவம் ஒன்றுமே நிற்க மற்றைய நான்கும் கழியுமென்றும் சிலர் உரைப்பர். இன்னும் வேதாந்தக்கட்டளையில் நனவிற் சாக்கிரம், நனவிற் சொற்பனம், நனவிற் சுழுத்தி யென்று மூன்றாக்கி, நனவிற் சாக்கிரத்தில் பஞ்சபூதம்போம்; நனவிற் சொற்பனத்தில் ஐம்பொறிகள்போம்; நனவிற் சுழுத்தியில் அந்தக்கரணங்கள் போம்; புருடனில் பிரகிருதிபோம்; காலபரத்தில் அசுத்த மாயை போம்; வியோமத்தில் சுத்த வித்தை ஈசுரம் சாதாக்கியம் மூன்றும் போம்; பரத்தில் விந்து போம்; விசுவகிராசத்தில் நாதம் போம்; உப சாந்தத்தில் சுத்த மாயை போம்; சொரூபத்தில் அஞ்ஞானம் போம். இதனைச் சமாதியில் நின்று ஒன்றொன்றாக நீங்கியறிக என்பர். இன்னும் பரையினது பேதமாகப் பதினெட்டு விதமாகவும் உரைப்பர் சிலர். சுத்தாவத்தையின் காரியம் என்பது நின்மல சாக்கிரம், நின்மல சொற்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியா தீதம் என்னும் ஐந்தும் மலநிவர்த்திக்குக் காரணமாகும். அவை அநாதி சிருட்டி தொடுத்து மோட்ச பரியந்தம் ஆன்மாவாலாகிய சிவபுண்ணியங்களாம். சிவபுண்ணியங்களாவன:— அபுத்திபூருவ சிவபுண்ணியம், புத்திபூருவ சிவபுண்ணியம், உபாய சரிதை, உபாய கிரியை, உபாய யோகம், உபாய ஞானம், உண்மை சரிதை, உண்மை கிரியை, உண்மை யோகம், உண்மை ஞானம் என்றும் பத்து விதமாயிருக்கும். இந்தப் பத்தில் முந்தின ஒன்பதும் மலநிலை. பிந்தின உண்மை ஞானமாகிய சிவபுண்ணியமொன்றும் அருள்

நிலை. அந்த உண்மை ஞானமொன்றும் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி. ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம் சிவபோகம், எனப்பத்து விதமாயிருக்கும். இந்தப்பத்தையும் சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மல சாக்கிர முதலைந் தவத்தையிலடக்கி ஆசாரியர் பக்குவனை சீடனுக்கு நிர்வாண தீக்ஷைசெய்து அறிவிப்பார். அவற்றையடக்கு முறையாவது :—தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், இந்நான்கும் நின்மல சாக்கிரத்திலடங்குமென்றும், ஆன்ம தரிசனம், சிவரூபம் இவ்விரண்டும் நின்மல சொற்பனத்திலடங்குமென்றும், நின்மல சுழுத்தியில் தசகாரியத்தில் அடங்குவதொன்றுமில்லையென்றும், ஆன்மா அருள் செய்யும் பஞ்சகிர்த்தியத்தை யான் செய்வேனென்று கருதுதல் மாத்திரவேயன்றிச் செய்வதில்லையென்றும், ஆன்ம சுத்தியும் சிவதரிசனமும் சிவயோகமும் நின்மல துரியத்திலடங்குமென்றும், சிவபோகம் ஒன்றும் நின்மல துரியாதீதத்தில் அடங்குமென்றும் கூறுவர். இதன் விரிவை ஆகமங்களிற் பரக்கக் காணலாமாதலின் பெருகுமென்றஞ்சி இத்துடன் நிறுத்தலாயிற்று.

ஒருவனோர் பொருளிலாற் குற்றுதவி னுளம்வியந்
தோகைபெற மன்றியுடைமை
யுதவுரு வமையத்தி லுதவினுந் தன்னிடத்
துள்ளதிற் பெரிதளிக்கும்
பொருளதா யினுமதனி னினியதா யினுமவன்
புந்திமகிழ் வுற்றிடுவனல்
புனல்விடுத் திடுமுடியி னிற்புணரி யிற்பெருகு
புண்ணியத் தெய்வநதிதான்
மருவலா னீர்விருப் பிலைநினக் கொருதிவலை
மற்றென்முடி யிற்றெறிப்பின்
வைப்பன்வா னத்தினென வெத்திறத் தானுநினை
மக்கணினை வுற்றுய்ந்திட
வருளினுன் முனம்விதித் தவனுத லான்மகிழ்ந்
தபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

(இ - ள்.) ஒருவன் - (உலகத்தார்க்குத் தன்னுலியன்ற நன்றியைச் செய்தலே தன் கடமையெனவுணர்ந்த) ஒருவன்,— ஓர் பொருள் இலாற்கு - ஓர் சிறிதும் பொருளில்லாதவனுகிய வறிஞனுக்கு,— உற்று - (தானுகவே அவ்வறிஞனிருக்கு மிடந்தேடி) யடைந்து,— உதவின் - (வேண்டியதொரு பொருளைக்) கொடுத்தால், — உளம் வியந்து - (கிடைத்தற்கரிய பொருள் முயற்சியின்றிக் கிடைக்கப்பெற்றமையால்) உள்ளத்தின்கண் வியப்புற்று,— ஓகை பெறும் - (அதனைப் பெற்ற வறிஞன்) மகிழ்ச்சியடைவன்,—அன்றி - அல்லது,— உடைமை உதவுறு அமையத்தில் - (ஒருவன் பொருளுடையனுயிருந்தும்) தன் பொருள் தனக்குப்பயன்படாத காலத்தில்,— உதவினும் - (வேண்டியதொரு பொருளைக்) கொடுத்துதவினுலும்,— தன்னிடத்து உள்ளதின் - (அல்லது) தன்னிடத்துள்ள பொருளினும்,— பெரிது அளிக்கும் பொருளது ஆயினும் - (பிறர் கொடுப்பது) பெரும் பயனைத்தரத்தக்க பொருண்மையையுடையதாயினும்,— அதனின் இனியது ஆயினும் - (அல்லது) தன்னிடத்துள்ள பொருளினும் இனிமையைத் தருவதாயினும்,— அவன் - அப்பொருள் கொடுக்கப்பெற்றுன்,— புந்திமகிழ்வு உற்றிடுவன் - மனமகிழ்ச்சியடைவன்,— புனல் விடுத்திடும் முடியினில் - (உலகியல் இங்ஙனமிருப்ப, அன்பர்களால்) நீர் சொரிந்து அபிடேகம் செய்யப்பெறும் உமது திருமுடியின்கண்,— புணரியில் பெருகும் புண்ணியத் தெய்வநதி - கடல்போற் பெருகும் பேரளவினைக் கொண்டதும் புண்ணியத்தைக் கொடுக்குங் கடவுள் தன்மை வாய்ந்ததும் ஒப்புயர் வற்றதுமாகிய கங்கை நீர்,— மருவலான் - இடைவிடாது பொருந்தியிருத்தலால்,— நினக்கு நீர் விருப்புஇலை - உமக்குப் பிறராட்டும் நீரின்கண் விருப்பமில்லை,— ஓர் திவலை என் முடியில் தெறிப்பின் - (அங்ஙனம் விருப்பமில்லாதவராயிருந்தும்) ஓர் துளி நீரையாயினும் எனது முடியின் கண் தெரித்தால்,— வானத்தின் வைப்பன் என - (அவ்வாறு தெறித்தோரையும் ஒரு பூதருமறியாத) சிதாகாசத்தின்கண்ணே என்றும் அழிவுறுதிருக்கும்படி வைத்துப் பேரானந்தத்தை நுகரச் செய்வேனென்று,— மக்கள் - மனிதர்களனைவரும்,— எத்திறத்தானும் - எவ்வழியாலாயினும்,— நினைநினைவுற்று - உம்மை நினைத்து,— உய்ந்திட - உய்யும்பொருட்டு,—அருளினுல் - உமது பெருங்கருணைத் திறத்தால்,— முனம் - அநாதி காலத்திலேயே,— விதித்தவன் ஆதலான் - (உமது வாக்காகிய இருபத்தெட்டு சிவாகமத்தின் கண்ணும்

உமது பூசையின் பயனை) விதித்திருப்பவர் நீரேயாதலின்,— மகிழ்ந்து - (அடியேன் செய்யும் பூசைக்கும்) மகிழ்ந்த,— அபிடேகம் ஆடியருள் - அபிஷேகத்தை யாடியருள்வீராக என்றபடி. 'அறிவுற்று என்னங்கைமலர் செறிவுற்றமர்ந்த இறை, என்பதற்கு முதற் செய்யுளின்கண் உரைத் தாங்கு உரைத்துக் கொள்க.

எனது அங்கையின்கண் எழுந்தருளியிருக்கும் இஷ்டலிங்கப்பெருமானே! இவ்வுலகின்கண் பிறர்க்குதவி செய்து மகிழ்விக்கக் கருதிய ஒருவன் ஓர் பொருளுமில்லாத வறிஞனுக்குத் தானாகவே அவனிருக்குமிடந்தேடிச் சென்று வேண்டியதொரு பொருளைக் கொடுத்தால் அவ்வறிஞன் கிடைத்தற்கரிய பொருள் முயற்சியின்றிக் கிடைத்தமையால் மகிழ்ச்சியடைவன்; அல்லது, பொருளுடையனாயிருந்தும் தன் பொருள் தனக்குதவாத காலத்தில் வேண்டிய பொருளைக் கொடுத்துதவினும், அல்லது தன்னிடத்துள்ள பொருளினும் பெரும் பயனைத் தரத்தக்க பொருளைக் கொடுத்துதவினும், அல்லது தன் பொருளினும் இனிமையைத் தரத்தக்க பொருளாயிருப்பினும் அப்பொருள் பெற்றோன் மகிழ்ச்சியை யடைவன். உலகியல் இங்ஙனமிருப்ப, நீரோ கடல்போற் பெருகும் பேரளவினையுடைமையாலும், பெரும் புண்ணியத்தைக் கொடுப்பதாலும், கடவுள் தன்மை வாய்ந்ததாலும் ஒப்புயர்வற்று விளங்கும் கங்கை நீரை என்றும் இடைவிடாது உமது திருமுடியின்கண் உடையவராயிருத்தலின் பிறராட்டும் நீரின்கண் விருப்பமில்லாதவராயிருக்கின்றீர். ஆயினும் உலகின்கண்ணுள்ள மக்களனைவரும் எவ்வழியிலாயினும் உம்மை நினைந்து உய்யும்பொருட்டு அநாதி காலந்தொட்டே சிவாகமங்களில் "எனது முடியின் ஒரு துளி நீரையாயினும் தெறிப்பவரை அடைதற்கரிய சிதாகாச வெளியின்கண்ணே வைத்துப் பேரின்பத்தை நுகரச் செய்வே"னென்று நீரே விதித்திருக்கின்றமையால் அடியேன் ஆட்டும் அபிஷேகத்தையும் ஏற்றுக்கொண்டு அருள்வீரென ஆசிரியர் நயம்பெற வேண்டிக்கொண்டாராயிற்று. இதனால் இறைவனாகிய சிவபெருமான் நிட்களவடிவாய் எங்கும் நிறைவுற்றவராயும் ஒன்றையும் வேண்டாதவராயும் இருப்பினும் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு சகள நிட்கள வடிவமாயெழுந்தருளி எவற்றையும் ஏற்றுக்கொண்டருள்வரென்பது பெறப்படுகின்றது. முடியினில் - ஏழனுருபு இடப்பொருளின் கண்ணது. புணரியில் - ஐந்தாவது ஒப்புப்பொருளின்கண்ணது.

வீரசைவம்.

புரவலர் :—

பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலைய சுவாமிகள் அவர்கள்.

நிறைவேற்றுக் கழகத்தார் :—

௧. திருவாளர் ஆ. பொன்னுசாமி ஐயரவர்கள், சிதம்பரம்.
௨. „ C. வைத்திலிங்க ஐயரவர்கள், பெருவளநல்லூர்.
௩. „ சிவப்பிரகாச ஐயரவர்கள், அரும்பாவூர்.
௪. „ S. வேலாயுத ஐயரவர்கள், சோரத்தூர்.
௫. „ V. குமாரவீரய்யர் அவர்கள், முசிரி.

பத்திராசிரியர் :—வீ. குமாரவீரய்யர்.

கட்டுரையெழுதிக் காப்பதாக வாக்களித்துள்ள ஆசிரியர்கள்

திருவாளர் G. C. வீரப்பா B. A. L. L. B. அவர்கள்,
வழக்கறிஞர், பெங்களூர்.

„ உருத்திரசாமி ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
ஸ்ரீமத் ஞானியார் பாடசாலை, திருப்பாதிரிப்புலியூர்.

„ பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்,
திரிசிரபுரம்,

„ பண்டிதர், அ. கந்தசாமி பிள்ளையவர்கள், கவர்ன்மெண்டு
காலேஜ் தமிழ் விரிவுரையாளர், கும்பகோணம்.

„ ஏகாம்பர ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
பச்சையப்பர் உயர்தர கலாசாலை, காஞ்சிபுரம்.

„ வித்துவான் அ. வரதநஞ்சய பிள்ளை அவர்கள்,
ஸ்ரீகருணீக புராண நூலாசிரியர், ஜலகண்டபுரம்.

ஆயுட் சந்தா முன்பணம் :— ...	25—0—0
ஆண்டுச் சந்தா :— ...	2—0—0
மாணவர்கட்கு :— ...	1—8—0
தனியிதழ் :— ...	0—4—0